காட்சியளிக்கும்படி செய்தல், இதனை ஊக்குவிப்பதற்காக தனியார் தொழில் துறை உரிமையாளர்கள், மீன் வளர்ப்பதற்கு ஊக்கம் அளிப்பதோடு, அலங்கார மீன் வகைகளையும் வளர்க்கும் இந்த மீன் காட்சியகம் ஊக்குவிக்கின்ற இந்த முக்கியமான காரணங்களை மையமாக வைத்து வருகின்ற நிதியாண்டினிலே மீண்டும் நிதிநிலைக் குழுவினிலே இதனை முன்வைத்து இதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

236—

மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்

38108—**திரு. சா. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திண்டிவனம் வட்டம், மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை எம்.எஸ்.585, கல்வி, நாள் 14-7-94-ன்படி, 1994-95 கல்வியாண்டில் திண்டிவனம் கல்வி மாவட்டம் மைலம் ஒன்றியத்தில் புலியனூர் கிராமத்தில் உள்ள துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

239—

சென்னையில் புதிய பேருந்து நிலையங்கள் அமைத்தல்

9919—**திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 5]

(அ) சென்னையிலிருந்து வடக்கு நேக்கிச் செல்லும் பேருந்துகளும், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும் தாம்பரம், பூந்தமல்லி, ரெட்ஹில்ஸ் ஆகிய மூன்று இடங்களில் பேருந்து நிலையம் அமைத்து, அங்கிருந்து புறப்பட்டுச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சென்னையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளும் தாம்பரம், பூந்தமல்லி, ரெட்ஹில்ஸ் ஆகிய மூன்று இடங்களில் பேருந்து நிலையம் அமைத்து அங்கிருந்து புறப்பட்டுச் செல்வது குறித்து தற்போது திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:**—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடிப் பகுதியில் திருமதி மேரி சின்னராணி என்ற பெண் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடிக்கு அருகில், சமீபத்தில் ஆசிரியை மேரி சின்னராணி என்பவர் காரில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பெற்றதாக உள்ள பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று ஓர் பிரச்சினைக்கு என்னிடம் அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. என் அனுமதியைக் கோரியுள்ள உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி, திரு. செ.கு. தமிழரசன்,